முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**இடைநிலைப் பரீட்சை – 2011 ஜுலை**

## (55) தகவல் முகாமைத்துவமும் வியாபாரத்தில் அதன் பிரயோகமும்
Information Management & Application in Business

30-07-2011
பிற்பகல்
[2.00 – 5.00]

**நேரம்: மூன்று (03) மணித்தியாலம்**

பக்கங்களின் எண்ணிக்கை: 08
வினாக்களின் எண்ணிக்கை : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்**

(1) *இவ்வினாத்தாள் **A, B, எனும் இரண்டு (02)** பகுதிகளைக் கொண்டது.*

(2) ***கீழே குறிப்பிட்டவாறு ஐந்து (05) வினாக்களுக்கு விடை எழுதுக.***
- ***பகுதி A யிலுள்ள வினா இலக்கம் 01 இற்கும்***
- ***பகுதி B யிலிருந்து எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கும்***

(3) ***விடைகள் யாவும்** உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே ஒரு மொழியிலேயே எழுதப்பட வேண்டும்.*

(4) *மொத்தம் 100 புள்ளிகள்.*

---

### பகுதி - A
பல்தேர்வு வினாக்கள்
இந்தப் பகுதியிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
40 புள்ளிகள்

**01.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாப் பிரிவுக்குமான **மிகவும் பொருத்தமான** விடையினை, தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) என்னும் விடைகளிலிருந்து தெரிவுசெய்து உமது விடைப்புத்தகத்தில் வினாக்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதி, அவற்றிற்கு எதிரே தேர்வு செய்த விடையின் இலக்கத்தை எழுதுக.

(A) பின்வருவனவற்றுள் தகவல் முறைமைத் தொகுதியின் ஒரு பிரதான தொழிற்பாடாக வகைப் படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான கூற்று எது?

(1) தரவுகளை ஒத்திசைவிலிருந்து இலக்கவியலுக்கு மாற்றுதல் (Converting Data from Analog to Digital)

(2) தரவுகளை இலக்கவியலிலிருந்து ஒத்திசைவிற்கு மாற்றுதல் (Converting Data from Digital to Analog)

(3) தரவுகளைத் தகவல்களாக மாற்றுதல் (Converting Data into Information)

(4) தரவுகளை நீக்குதல் (Data Deletion)

(B) அன்றாட நடவடிக்கைகளுக்காக (for day to day business) தேவைப்படும் தகவல் வகை அறியப்படுவது,

(1) செய்முறைப்படுத்தப்பட்ட தகவல் (Processed Information)
(2) தொழிற்படு தகவல் (Operational Information)
(3) சாதுரியமான தகவல் (Tactical information)
(4) உத்தி முறையான தகவல் (Strategic Information)

(C) நிறுவனத்தினது தேவைகளைப் பொறுத்து பலதரப்பட்ட தகவல் முறைமைகள் நிறுவனமொன்றில் பயன்படுத்தப்பட முடியும். தீர்மானமெடுக்கும் செயற்பாடுகளுக்கு உதவுவதற்கு, வெளிவாரியாகப் பயன்படுத்தக்கூடிய முறைமைத் தொகுதியொன்று பின்வருவனவற்றுள் எது?

(1) ERP
(2) DSS
(3) TPS
(4) OAS

(D) 1,048,576 கிலோ பைற்ஸ் இற்குச் சமமானது,

(1) 1 மெகா பிற்
(2) 1 மெகா பைற்
(3) 1 ஜிகா பிற்
(4) 1 ஜிகா பைற்

(E) ASCII என்பது, கணினியொன்றில் தரவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்திட பயன்படுத்தப்படுகின்ற ஒரு ஈரிலக்க குறியீட்டு முறை (binary coding system) ஆகும். ASCII என்பது குறித்து நிற்பது,

(1) Analog System Code for Input Information.
(2) American Standard Code for Information Interchange.
(3) Automatic Software Code for Input Information.
(4) Autonomous Standard Code for Information Input.

(F) RFID தொழில்நுட்பமானது, பட்டைக் குறியீட்டுத் தொழில்நுட்பத்திற்காக (Barcode Technology) சுப்பர் மார்கட், நூலகம் போன்ற இடங்களில் ஒரு சாத்தியமான பிரதியீடாக அடிக்கடி குறிப்பிடப்படுகின்றது. "RFID" எனும் பதம் குறித்து நிற்பது,

(1) தொலைக்கோப்பு உள்ளீட்டு சாதனம் (Remote File Input Device)
(2) எழுமாற்று இயல்பொன்றிணைப்பு சாதனம் (Random Feature Integration Device)
(3) வானொலி அதிர்வெண் அடையாளம் (Radio Frequency Identification)
(4) ஒதுக்கீட்டுக் கோப்பு அடையாளத் தரவு (Reserved File Identification Data)

(G) கணினி ஒன்றுக்கு இணைக்க முடியுமான உள்ளீட்டு, வெளியீட்டு சாதனங்களுள் (Input–Output Devices) வரைவியானது (plotter) இல்லக் கணினியொன்றின் பகுதியாக அரிதாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு வரைவி உரித்தாகின்ற வகையினம் (categories) பின்வருவன வற்றுள் எது?

(1) அச்சுப்பொறி (Printer)
(2) நுண்ணாய்வுக் கருவி (Scanner)
(3) ஒளித்தோற்றக் கவர்வு சாதனம் (Video Capture Device)
(4) தொடுதிரை (Touch Screen)

(H) விண்டோஸ் போன்ற தொழிற்படு முறைமை (Operating Systems) ஒன்றினது வரைகலை பயனர் இடைமுகப்பிற்கு (Graphical user interface) முக்கிய பகுதிகளாக கோப்புகள்(files), உறைகள் (folders), பிரயோகங்கள் (applications) போன்ற இலக்குப் பொருட்களை (objects) பிரதிநிதித்துவப்படுத்திட இந்தப் படங்கள் (Pictograms) பயன்படுத்தப் படுகின்றன. இப்படங்கள் பின்வருவனவற்றுள் எதுவாக சிறப்பாக அறியப்படுகின்றன?

(1) புகைப்படங்கள் (Photos)
(2) வரைபுகள் (Graphs)
(3) படவுருக்கள் (Icons)
(4) கட்டளை நினைவுத் தூண்டி (Command Prompt)

(I) ஒரு மாணவன் அச்சிட்ட கடவுச்சீட்டு அளவு புகைப்படமொன்றை வைத்துள்ளான். அந்தப் புகைப் படத்தை அவரால் தயாரிக்கப்பட்டுள்ள சொல்முறைவழிப்படுத்திய ஆவணமொன்றுக்குள் (Word Processing document) செருகுவதற்கு (insert) பின்வருவனவற்றுள் எச்சாதனம் அவருக்கு உதவக்கூடும்?

(1) ஒரு ஒளி உமிழ் இருமுனைய தெரிவிப்பு (A LED Monitor)
(2) ஒரு நுண்ணாய் வருடி (A Scanner)
(3) ஒரு காந்தமையெழுத்துரு வாசிப்பி (A MICR Reader)
(4) ஒரு பட்டைக் குறியீட்டு வாசிப்பி (A Barcode Reader)

(J) பின்வருவனவற்றுள் ஒரு மின்னஞ்சல் பயன்பாட்டு மென்பொருளின் பண்பியல் (a characteristic of an Electronic Mail Application Software) எது?

(1) கல முகவரிகள் (Cell Addresses)
(2) படவில்லைகள் (Slides)
(3) சேவையக நிறுவல்கள் (Server Settings)
(4) பதிவுகள் (Records)

(K) ஸ்கைப் (Skype) என்பது பின்வரும் எந்த கொள்பணிக்காகப் பயன்படுத்தப்படும் மென்பொருளுக்கு ஒரு உதாரணமாகும்?

(1) இணையத்தின் வழியாக பனுவல் மற்றும் குரல் உரையாடல் (Text and Voice Chatting over the Internet)
(2) மின்னஞ்சல் (Electronic Mail)
(3) இணைய தொலைக்காட்சி (Internet TV)
(4) இணையத்திலிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்தல் (Buying goods and services from the Internet)

(L) கணினி மொழியான ஜாவா (Java) பின்வருவனவற்றுள் எதற்கு ஒரு உதாரணமாகும்?

(1) ஊயர்நிலை மொழிகள் (High Level Languages)
(2) இயந்திர குறிமுறை (Machine Code)
(3) ஒருங்கிணைப்புச் செய்நிரல் மொழி (Assembly Programming Language)
(4) கீழ்மட்ட மொழி (Low Level Languages)

(M) பின்வரும் பிரயோக மென்பொருள்களுள் வாய்ப்பாடுகள் (Formulas), தொழிற்பாடுகள் (Functions), பணித்தாள்கள் (Worksheets) மற்றும் பணிப்புத்தகங்கள் (Workbooks) சம்பந்தமானது எது?

(1) தரவுத்தள முகாமை மென்பொருள் (Database Management Software)
(2) சொல்முறைவழிப்படுத்திய மென்பொருள் (Word Processing Software)
(3) பரவுதாள் மென்பொருள் (Spreadsheet Software)
(4) முன்வைப்பு மென்பொருள் (Presentation Software)

(N) பின்வரும் மொடியூல்களுள் (modules) கணக்கீட்டு மென்பொருள் ஒன்றின் (Accounting Software) மைய மொடியூல் (Core module) ஆக கவனத்திற்கொள்ள பொருத்தமில்லாத மொடியூல் எது?

(1) வரவேண்டிய கணக்குகள் (Accounts receivable)
(2) பொதுப் பேரேடு (General Ledger)
(3) செலுத்த வேண்டிய கணக்குகள் (Accounts payable)
(4) நேரத்தாள் (Timesheet)

(O) கணினி வலையமைப்புகளுக்கான ஒரு நியம வகையினம் (standard category) அல்லாதது பின்வரும் இடத்தியல்களுள் (Topologies) எது?

(1) பஸ் இடத்தியல் (Bus Topology)
(2) மர இடத்தியல் (Tree Topology)
(3) நட்சத்திர இடத்தியல் (Star Topology)
(4) டாக்ஸி இடத்தியல் (Taxi Topology)

(P) கணினிகளின் வினையாற்றுகைகளை, தீய செய்நிரல்கள் (Malicious Programmes) தாக்கு கின்றமை அதிகரித்தவண்ணம் உள்ளன. பின்வருவனவற்றுள் ஒரு தீய பொருளாக (malware) கருதக்கூடியது எது ?

(1) தவறு நீக்கிகள் (Debuggers)
(2) வட்டு துண்டாடல் நீக்கிகள் (Disk Defragmenters)
(3) சொல் செய்முறைப்படுத்திகள் (Word Processors)
(4) இரகசிய நுளைவுத் தாக்கிகள் (Trojan Horses)

(Q) தன்னியக்கக் காசளிக்கும் இயந்திர (ATM) அட்டை அல்லது கடன் அட்டையைப் பயன்படுத்தும்போது ஒரு PIN இலக்கம் பாதுகாப்பை அதிகரித்திடப் பயன்படுத்தப்படுகிறது. "PIN" என்பது குறித்து நிற்பது,

(1) Person Identity Network.
(2) Personal Information Number.
(3) Personal Identification Number.
(4) People Identification Network.

(R) மென்பொருள் அபிவிருத்தி நடவடிக்கைகளில் வெளி ஆதார மூலம் (Outsourcing) என்பது குறிப்பது,

(1) ஆதார மூலக்குறி முறையை எழுதுதல் (Writing the Source Code)

(2) சேவைகளை வழங்கும்படி மற்றொரு கம்பனியோடு ஒப்பந்தமிடல்(Contracting another Company to provide services)

(3) உங்களது மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்கு மூலவகை மாதிரியிடல் முறையைப் ( Prototyping method) பயன்படுத்துதல்

(4) பிரயோக முடுக்கி மென்னுறுப்பின் (application generator software) ஊடாக ஆதார மூலக்குறியின்றி மென்னுறுப்பை எழுதுதல் (writing software without a source code)

(S) கடையில் தீ ஏற்படக்கூடிய சாத்தியத்திற்கு எதிராக, வீடியோ வாடகைகள் சம்பந்தமான தரவுகள் பதிவுசெய்யப்பட்ட தமது கணினியைப் பாதுகாப்பதை உறுதிசெய்து கொள்ளும் தேவைப்பாட்டையுடைய ஒரு வீடியோ வாடகைக் கடைக்கு பரிந்துரை செய்யக்கூடிய கொள்பணி (task) பின்வருவனவற்றுள் எது?

(1) தரவுகளை DVD ஒன்றில் காப்பு செய்து (backup) அவற்றை அதே கடையில் வைத்தல்

(2) தரவுகளை பரப்பு செலுத்தி (Flash Drive) ஒன்றில் காப்பு செய்து ஒரு தொலை அமைவிடத்தில் வைத்தல்

(3) அதே கடையில் வேறானதொரு வன்வட்டியில் தரவுகளைக் காப்பு செய்து வைத்தல்

(4) தரவுகளின் அச்சுப்படி (printout) ஒன்றை எடுத்து அதை அதே கடையில் வைத்தல்

(T) பின்வரும் உற்பத்திகள்/சேவைகளுள் எது Moneygram இற்கு ஒரு உதாரணமாக அமைகிறது?

(1) இணையத்தின் மீதான இலத்திரன் ரெலிகிராம் சேவை (Electronic Telegram Service on the Internet)

(2) ஒரு கணக்கிடல் மென்பொருள் (An accounting Software)

(3) முழுமையான நிதி இடமாற்ற சேவை (Global Fund Transfer Service)

(4) இணையத்தின் மீதான ஒரு இலத்திரன் முன்னிலைக் களஞ்சியம் (An electronic store-front on the Internet)

(ஒன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 40 புள்ளிகள்)

## பகுதி - B

இப்பகுதியிலிருந்து ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடை எழுதுக.
60 புள்ளிகள்

**02.** (a) நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தப்படும் "பிரச்சினை தீர்த்தல்" செயன்முறையானது பெறுமதி மிக்க தகவல்களிலேயே தங்கியிருக்கின்றன. பெறுமதியான தகவல்களின் பண்புகள் ஆறினைப் (06) பட்டியல்படுத்துக. (06 புள்ளிகள்)

(b) ஒரு நிறுவனத்தின் முகாமை மட்டங்களில் பிரயோகிக்கப்படும் தகவல்களின் வகையினங்களைக் குறிப்பிட்டு அவற்றைத் தெளிவாக விளக்குக. (05 புள்ளிகள்)

(c) நிறுவனத்தின் தொழிற்படு பரப்பினை அடிப்படையாகக் கொண்டு ஒரு நிறுவனத்தின் உள்ளே பயன்படுத்த முடியுமான தகவல்களின் நான்கு (04) வித்தியாசமான வகைகளைப் பட்டியலிடுக. (04 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

**03.** (a) "தகவல் தொழில்நுட்பம் (Information Technology)" என்ற பதத்தைப் பொருள் வரையறை (define) செய்க. (02 புள்ளிகள்)

(b) கைமுறை தகவல் முறைமைகளிலும் பார்க்க (Manual Information Systems) கணினி அடிப்படையிலான தகவல் முறைமையினால் (CBIS) கிடைக்கப்பெறும் நன்மைகள் ஐந்தினைப் (05) பட்டியல்படுத்துக. (05 புள்ளிகள்)

(c) நிறுவனமொன்றில் CBIS ஐ அறிமுகப்படுத்துதல் மற்றும் பயன்படுத்துதலுடன் இணைந்த செலவுகள் (associated with cost) இரண்டினை (02) பட்டியல்படுத்துக. (02 புள்ளிகள்)

(d) முகாமையாளர்களின் பயன்பாட்டிற்கான மூன்று (03) வகை அறிக்கைகளை ஒரு முகாமைத் தகவல் முறைமையானது உண்டாக்கக்கூடும். இந்த மூன்று வகைகளைப் பட்டியல்படுத்தி ஒவ்வொன்றைப் பற்றியும் சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

**04.** (a) ஐந்தாம் தலைமுறைக் ($5^{th}$ Generation) கணினிகளின் ஒரு பண்புக்கூறு யாதெனில் அவை செயற்கை நுண்மதியை (Artificial Intelligence) அடிப்படையாகக் கொண்டவை. **செயற்கை நுண்மதி** என்ற பதத்தின் பொருளை இவ் உள்ளடக்கத்தில் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(b) மடிக்கணினியினதும் (Laptop computer) மேசைக் கணினியினதும் (Desk computer) பண்புக் கூறுகளுக்கிடையேயுள்ள மூன்று (03) ஒற்றுமைகளையும் மூன்று (03) வேற்றுமைகளையும் பட்டியலிடுக. (06 புள்ளிகள்)

(c) "வணிக மென்பொருட்களை (உதாரணம்; மைக்கிரோசொப்ட் ஓபிஸ்) கொள்வனவு செய்ய கட்டுப்படி யாகாதவர்கள் "திறந்த மூலாதார" Open Source மென்பொருட்களை ஒரு மாற்றீடாகப் பாவனை செய்யலாம்."

(i) "திறந்த மூலாதாரம் (Open Source)" என்பதனால் நீர் கருதுவது யாது?

(ii) ஒரு மாற்றீடாக (An Alternative) அதனைக் கருத முடிவது ஏன்? (04 புள்ளிகள்)

(d) கணினி அடிப்படையான தகவல் முறைமையில் காண முடிகின்ற வெளியீட்டுக் கட்டுப்பாடுகள் (output controls) மூன்றினைக் (03) குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

**05.** (a) “முறைமை அபிவிருத்தி வாழ்க்கை வட்டத்தில் (SDLC) முதலாவது கட்டமானது ஏனையவற்றை விட மிக முக்கியமானது” இந்தக் கட்டத்தின் பெயரை எழுதி, முதலாம் கட்டத்தில் மேற்கொள்ளப் படுகின்ற கொள்பணிகளை (tasks) விளக்குக. (05 புள்ளிகள்)

(b) முறைமை அபிவிருத்தியில் (System Development) பயன்படுத்தப்படுகின்ற மூலவகை மாதிரி (Prototype method) முறையில் பின்பற்றப்படும் படிமுறைகளை விளக்குவதற்கு ஒரு வரைபடத்தை வரைக. (07 புள்ளிகள்)

(c) கணினி வலையமைப்புகளில் அல்லது இணையத்தில் பயன்படுத்தப்படுகின்றபடி, கீழ்வரும் சொற்சுருக்கங்களின் (abbreviations) பொருளை எழுதுக.

(i) WPN

(ii) ADSL

(iii) B2B (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**06.** (a) கணினி அடிப்படையான தகவல் முறைமையானது (CBIS) பலதரப்பட்ட அச்சுறுத்தல்களை அனுபவிக்க நேரிடலாம். CBIS இன் தொழிற்பாட்டின்போது தாக்கம் ஏற்படுத்தக்கூடிய இயற்கை அச்சுறுத்தல்கள் நான்கினை (04) பட்டியலிடுக. (04 புள்ளிகள்)

(b) புதிதாக அமைக்கப்பட்ட வங்கிக் கிளையொன்று 10 கணினிகளைக் கொண்டுள்ளது. அது மின்சார சக்தியை காப்பு செய்தலுக்கான (backup for electricity power) வழியை நோக்கி யுள்ளது. வங்கியின் ஊழியர் ஒருவர், மின்சக்திக் காப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு 10 UPS அலகுகள் (Uninterruptible Power Supply) தேவைப்படுமென ஆலோசனை வழங்கினார்.

இத்தீர்மானத்திற்கு ஒருவர் உடன்பட முடியுமா? உங்கள் விடையை நியாயப்படுத்துக.

(04 புள்ளிகள்)

(c) சங்கோத பாஷை (Encryption) என்பது வலைப்பின்னல் கட்டுப்பாடுகளில் முக்கியமான ஒன்றாகும். சங்கோத பாஷை / இரகசிய மொழிக்கு மாற்றுதலின் (Encryption) இரண்டு பிரதான வகைகளைப் பட்டியற்படுத்தி அவற்றின் வேறுபாட்டைத் தெளிவாக விளக்குக.

(04 புள்ளிகள்)

(d) அழையாது தலையிடுதலைக் கண்டுபிடிக்கும் முறைமை (Intrusion Detection System) ஒன்றினால் ஆற்றப்படுகின்ற தொழிற்பாடுகளை விளக்குக. (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**07.** (a) பிரபலமானதொரு பரவுதாள் பயன்பாட்டின் (a popular spreadsheet application) திரைக்காட்சி (screen shot) ஒன்றை கீழ்வரும் படம் காண்பிக்கிறது. வார இறுதியில் மூன்று ஊழியர்களால் வேலை செய்யப்பட்ட மேலதிக நேர மணித்தியாலங்கள் 1 மணித்தியாலத்திற்கான கொடுப்பனவு வீதம் ஆகியவற்றின் மீதான தகவல்களை அது உள்ளடக்கியுள்ளது.

| | A | B | C | D | E | F |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | **திகதி** | **ஊழியர் இலக்கம்** | **வேலை செய்த மணித்தியாலம்** | | |
| 3 | | 2011 ஜுன் 25 | 101 | 8 | | |
| 4 | | 2011 ஜுன் 26 | 102 | 5 | | |
| 5 | | 2011 ஜுன் 26 | 103 | 4 | | |
| 6 | | 2011 ஜுன் 26 | 101 | 8 | | |
| 7 | | | | | | |
| 8 | | **ஊழியர் இலக்கம்** | **பெயர்** | **1 மணித்தியாலத் திற்கான வீதம்(ரூ.)** | | **மொத்த வருமானம் (ரூ.)** |
| 9 | | | | | | |
| 10 | | 101 | A.W. பீரிஸ் | 250 | i | |
| 11 | | | | | | |
| 12 | | 102 | M.A. சல்டீன் | 400 | ii | |
| 13 | | | | | | |
| 14 | | 103 | P. சாந்திரூபன் | 700 | iii | |
| 15 | | | | | | |

i, ii, iii என அடையாளமிட்டுத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ள பெட்டிகளுக்கு பொருந்தக்கூடிய தாக ஒவ்வொரு ஊழியரதும் மொத்த வருமானத்தைக் கணிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய **வாய்ப்பாடு களை <u>(formulas)</u>** மேலே தரப்பட்டுள்ளபடி சரியான கல முகவரிகளைப் (cell addresses) பயன்படுத்தி எழுதுக. (உங்களது விடைத்தாளில் i, ii, iii இற்கான உரிய வாய்ப்பாடுகளை எழுதுக.

**குறிப்பு:** எண் பெறுமானங்களை (numerical value) எழுதுதலுக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது (09 புள்ளிகள்)

(b) இன்று சந்தையில் பல்வேறு வித்தியாசமான பெறுதயார்நிலை கணக்கீட்டு மென்பொருள் (off the shelf accounting software) கிடைக்கின்றன. அவற்றுள் மூன்றினைப் (03) பட்டியலிடுக. (03 புள்ளிகள்)

(c) உலகளாவிய வலையமைப்பில் ஒருவர் பொதுவாக வெப் போட்டல்ஸ் (Web Portals) என்று அழைக்கப்படுகின்ற ஒரு வகையான வலைகடப்பிடத்தை (Website) சந்திக்க நேரிடலாம். ஒரு வெப் போட்டலினால் ஆற்றப்படுகின்ற தொழிற்பாட்டைச் சுருக்கமாக விளக்கி வெப் போட்டல் களுக்கான உதாரணம் ஒன்றையும் தருக. (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

– o0o –